## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## நான்காம் பத்து

### ஆறாம் திருவாய்மொழி - தீர்ப்பாரை
### எம்பெருமான் பிரிந்தவுடன் பராங்குச நாயகி மயங்க, மயக்கம் தீர தேவதாந்தரக் கட்டுவிச்சியைக் கொணர்ந்த தாயைத் தோழி வெறிவிலக்க, திருநாமம் கேட்டு நாயகி உணர்தல்

** தீர்ப்பாரை யாம் இனி * எங்ஙனம் நாடுதும் அன்னைமீர்! *
ஓர்ப்பால் இவ்வொண்ணுதல் * உற்ற நல் நோய் இது தேறினோம் **
போர்ப் பாகு தான் செய்து * அன்று ஐவரை வெல்வித்த * மாயப் போர்த்
தேர்ப் பாகனார்க்கு * இவள் சிந்தை துழாய்த் திசைக்கின்றதே 1

திசைக்கின்றதே இவள் நோய் * இது மிக்க பெருந்தெய்வம் *
இசைப்பின்றி நீர் அணங்காடும் * இளந்தெய்வம் அன்றிது **
திசைப்பின்றியே * சங்கு சக்கரம் என்று இவள் கேட்க * நீர்
இசைக்கிற்றிர் ஆகில் * நன்றே இல் பெறும் இது காண்மினே 2

இது காண்மின் அன்னைமீர்! * இக்கட்டுவிச்சி சொற்கொண்டு * நீர்
எதுவானும் செய்து * அங்கோர் கள்ளும் இறைச்சியும் தூவேன்மின் **
மது ஆர் துழாய் முடி * மாயப் பிரான் கழல் வாழ்த்தினால் *
அதுவே இவள் உற்ற நோய்க்கும் * அருமருந்து ஆகுமே 3

மருந்தாகும் என்று * அங்கோர் மாய அலவை சொற்கொண்டு * நீர்
கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறும் * களன் இழைத்து என் பயன்? **
ஒருங்காகவே உலகேழும் * விழுங்கி உமிழ்ந்திட்ட *
பெருந்தேவன் பேர் சொல்ல கிற்கில் * இவளைப் பெறுதிரே 4

இவளைப் பெறும் பரிசு * இவ்வணங்கு ஆடுதல் அன்றந்தோ! *
குவளைத் தடங்கண்ணும் * கோவைச் செவ்வாயும் பயந்தனள் **
கவளக் கடாக் களிறட்ட பிரான் * திருநாமத்தால் *
தவளப் பொடிக் கொண்டு * நீர் இட்டிடுமின் தணியுமே 5

தணியும் பொழுது இல்லை * நீர் அணங்கு ஆடுதிர் அன்னைமீர்! *
பிணியும் ஒழிகின்றது இல்லை * பெருகும் இது அல்லால் **
மணியின் அணி நிற மாயன் * தமர் அடி நீறு கொண்டு *
அணிய முயலில் * மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கே 6

அணங்குக்கு அருமருந்து என்று * அங்கோர் ஆடும் கள்ளும் பராய் *
சுணங்கை எறிந்து * நும் தோள் குலைக்கப்படும் அன்னைமீர்! **
உணங்கல் கெடக் * கழுதை உதடாட்டம் கண்டென் பயன்? *
வணங்கீர்கள் மாயப் பிரான் தமர் * வேதம் வல்லாரையே 7

வேதம் வல்லார்களைக் கொண்டு * விண்ணோர் பெருமான் திருப்
பாதம் பணிந்து * இவள் நோய் இது * தீர்த்துக் கொள்ளாது போய் **
ஏதம் பறைந்து அல்ல செய்து * கள்ளூடு கலாய்த் தூய் *
கீத முழவு இட்டு * நீர் அணங்கு ஆடுதல் கீழ்மையே 8

கீழ்மையினால் அங்கோர் * கீழ் மகன் இட்ட முழவின் கீழ் *
நாழ்மை பல சொல்லி * நீர் அணங்கு ஆடும் பொய் காண்கிலேன் **
ஏழ்மைப் பிறப்புக்கும் சேமம் * இந்நோய்க்கும் ஈதே மருந்து *
ஊழ்மையில் கண்ண பிரான் * கழல் வாழ்த்துமின் உன்னித்தே 9

உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் * அவனை அல்லால் *
நும் இச்சை சொல்லி * நும் தோள் குலைக்கப்படும் அன்னைமீர்! **
மன்னப்படு மறை வாணனை * வண்துவராபதி
மன்னனை * ஏத்துமின் * ஏத்துதலும் தொழுது ஆடுமே 10

** தொழுதாடி தூமணி வண்ணனுக்கு * ஆட்செய்து நோய் தீர்ந்த *
வழுவாத தொல் புகழ் * வண்குருகூர்ச் சடகோபன் ** சொல்
வழுவாத ஆயிரத்துள் * இவை பத்து வெறிகளும் *
தொழுதாடிப் பாட வல்லார் * துக்க சீலம் இலர்களே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---